[29th October 1957

Engineering College for Salem

* 23 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to start an Engineering College at Salem; and

(*b*) if so, the cost thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Wages of hospital workers

* 24 *Q.*—SRI N. K. PALANISAMI AND * 229 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Dean of the Government General Hospital, Madras, has recommended to the Government during 1956 to increase the wages of hospital workers; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Government decided that the question of revision of scales of pay of hospital workers might be considered on merits.

SRI N. K. PALANISAMI : 1956-ம் வருஷத்திலிருந்து இம் மாதிரி தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அது விஷயமாக சர்க்காரும் சிபார்சு செய்திருக்கிறார்கள். ஒரு வருஷம் ஆகியும் ஏன் இன்னும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது விஷயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு நான்கு விஷயங்கள் பரிசீலனை செய்யப்பட்டது :

(1) Payment of washing allowance.

(2) Disparity in the rates of monthly rents collected.

(3) Payment of risk allowance to workers.

(4) Revision of scales of pay.

முதலாவது விஷயத்திற்கு பரிகாரம் அளிக்கப்பட்டது. இரண்டாவது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மூன்றுவது ஒத்தி வைக்கப்பட்டது. நான்காவது நர்சிங்க ஆர்டர்லிகளுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டது.

SRI S. B. ADITYAN : வைத்திய இலாகாவில் வேலை செய்யும் கடை நிலை ஊழியர்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள் விடு முறை கொடுக்க வேண்டுமென்று 1950-ம் வருஷத்திலேயே அரசாங்கம் உத்தரவு போட்டது. அப்படி இருந்தும்கூட ஜெனரல் ஆஸ்பத்திரியிலே வார விடுமுறை கொடுக்காமல் **வேலை** வாங்கப்பட்டு வருகிறது. அந்த வேலைக்கு ஒரு நயா பைசா கூட அதிகமாக சம்பளம் கொடுப்பது கிடையாது. இது மந்திரி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.